★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 25உ சனி (10—11—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 26உ ஞாயிறு (11—11—56) [இதழ் 131

இந்த இலட்சணத்தில் இது வேறு?

உலக பாங்கியிடம் கடன் உதவிபெற அமெரிக்கா சென்றுள்ள எட்டுப்பேர் கொண்ட இந்திய இரயில்வேக் குழு 'மேற்கு ஆசியாவில், தற்போது உருவாகியுள்ள போர்நிலையின் காரணமாக இந்திய இரயில்வேயைப் புதுமைப்படுத்தி முன்னேற்றமடையச் செய்யும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பாதிக்கப்படுகிறது', என்று அறிவித்துள்ளது.

வெளிநாடுகளிலிருந்து எஞ்சின், மற்றச் சாமான்கள் தருவிப்பதற்கு 200 மிலியன் டாலர்கள் மதிப்புக்கு ஆர்டர் தரப்பட்டுள்ளதாகவும், அவைகளைக் குறித்த நேரத்தில் இந்தியாவிற்கு அனுப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

காஷ்மீர்-இந்தியா விசித்திர அரசியல் உறவு!

இந்திய அரசியல் சட்டம் புறக்கணிக்கப்படுகிறது!

காஷ்மீர் அரசியல் சட்டத்தின் பெயராலேயே பதவிப் பிரமாணம் எடுப்பராம்

ஸ்ரீநகர், நவ. 8—

காஷ்மீரின் 'தனித் தன்மை'யை உறுதி செய்கிற பல விதிகள், காஷ்மீர் அரசியல் நிர்ணய சபையால் நிறைவேற்றப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

எதிர்காலத்தில், காஷ்மீர் மந்திரிகள், உதவி மந்திரிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள் எல்லாம், பதவிப் பிரமாணம் எடுக்கும்போது, காஷ்மீருக்கான அரசியல் சட்டத்தின் பெயராலேயே பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வர்—(இந்திய அரசியல் சட்டத்தின் பெயரால் அல்ல)—என்று ஒரு விதி, காஷ்மீர் அரசியல் சட்டத்திலேயே இணைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருப்பதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

'சர்தார்-ஐ-ரியாசத்' என்ற காஷ்மீரின் அரசியல் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிற முறை, அவருக்கான சம்பளம் பற்றிய விதிகளும் நிறைவேறிவிட்டனவாம்

சர்தார்-ஐ-ரியாசத்திற்கு மாதம் ரூ 5,500 சம்பளம் என்றும், இதுவன்றி ஆண்டொன்றுக்கு அவரது அதிகாரிகள், வீட்டுப் பராமரிப்பு, சுற்றுப்பயணம் இவற்றிற்காக ரூ 1,09,000 'அலவன்சா'கத் தரப்படும் என்றும் விதிக்கப்பட்டுள்ளதாம்.

இவருக்கு, இலவசமான வீட்டு வசதி, மோட்டார் வசதி முதலியனவும் தரப்படுமாம்

சர்தார்-ஐ-ரியாசத் பதவி காலியாகும்போது, சட்டசபைத் தலைவர் தேர்தலுக்கான தேதியை நிர்ணயிப்பார் என்றும், சட்டசபை உறுப்பினர்கள் அந்த நாளில் கூடி சர்தார்-ஐ-ரியாசத் பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுப்பர் என்றும், 'ராஜ்யத்'தின் பிரதம மந்திரி, இந்தியாவின் குடியரசுத் தலைவருக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பெயரைத் தெரிவித்து அங்கீகாரம் கோருவார் என்றும் கூறும் விதி ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளதாம்.

இந்த விதிகள், இந்தியா-காஷ்மீர் அரசியல் உறவுகளை விசித்திரமானதாக்குகின்றன என்று அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

அகதிகட்கு வாக்குரிமை

குடியரசுத் தலைவர் சட்டம்

புதுடில்லி, நவ 9—

அடுத்துவரும் பொதுத் தேர்தலில் ஓட்டளிப்பதற்கு வாக்குரிமை பெறுத அகதிகள், டிசம்பர் முதல் தேதிக்குள் இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்து கொண்டால், வாக்குரிமை வழங்கப்படும் என்ற சட்டத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ளார்.

காமன்வெல்த்திலிருந்து வெளியேறுவதை விரும்பவில்லையாம்

பண்டித நேருவின் வியாக்கியானம்

"சூழ்நிலைகள்—சந்தர்ப்பங்கள் நிர்ப்பந்தித்தாலன்றி காமன்வெல்த் உறவுகளை இந்தியா முறித்துக் கொள்வதை நான் விரும்பவில்லை"

என்று, நேரு பண்டிதர் கூறினாராம்!

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சர்வதேச நிலைகளைப் பற்றி விளக்குகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினாராம்.

"அந்த உறவை நீடிப்பதும், முறித்துக் கொள்வதும் இந்தியாவைப் பொறுத்ததுதான்; அந்த உறவு முறிக்கவே முடியாத சாசுவதமான ஒன்றல்ல; ஆனால், சந்தர்ப்ப நிர்ப்பந்தமின்றி, அந்த உறவை முறித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. நாம் அந்த உறவைக் கொண்டிருப்பதினாலேயே, எகிப்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளைக் கண்டிக்காமலிருக்கவில்லை; வன்மையாகக் கண்டித்தே இருக்கிறோம்"

என்றும், நேரு பண்டிதர் கூறினாராம்.

"மற்றொன்றும் கவனிக்க வேண்டும்; காமன்வெல்த்திலிருந்து வெளியேறி விடுவதினாலேயே, உள்ளே இருக்கும்போதை விட சமாதானத்திற்காக அதிகமாக சேவை புரிய முடியுமா என்பதையும் எண்ணிப் பார்த்தாக வேண்டும்"

என்றும் அவர் வியாக்கியானம் பண்ணினாராம்!

வடநாட்டு ஆலை அரசர்களின் பேராசை

நிறைவேற்றித் தர டில்லி சம்மதம்?

15,000 தறிகளும், 2,50,000 கதிர்களும் அதிகரிக்கப்படுமாம்

புதுடில்லி, நவ. 8—

வடநாட்டு ஆலை அரசர்களின் பேராசையை நிறைவேற்றி வைப்பது என்று டில்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்!

அதாவது, ஆலைகளில் 15,000 தறிகளையும், 2,50,000 கதிர்களையும் உற்பத்தியில் ஈடுபடுத்த டில்லி சர்க்கார் சம்மதித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

'வரப்போகும் ஐந்தாண்டுக் காலத்தில் அதிகரிக்கக்கூடிய துணித் தேவையைச் சரிக்கட்டவே விசைத்தறியைப் புகுத்துகிறோம்; அம்பர் சர்க்கா திட்டத்தை அமுல் செய்கிறோம்,' என்று கூறிவரும் டில்லி, ஆலைகளின் உற்பத்தி சக்தியை அதிகரிக்கவும் ஒப்பியிருப்பது பலருக்கு வியப்பைத் தந்திருக்கிறது

1958-ம் ஆண்டு இறுதியிலேயே இந்தியாவில் நபர் ஒன்றுக்கு 18·5 கெசம் துணி தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டிருப்பதாகவும், இதனைச் சரிக்கட்டத்தான் ஆலைகளின் உற்பத்தி சக்தியை அதிகரிப்பதாகவும் வியாக்கியானம் செய்யப்படுகிறது.

ரூர்கேலா திட்டச் செலவு மதிப்பு

ரூ. 40 கோடி உயருமென தகவல்

ரூர்கேலாவில் ஜெர்மன் நிறுவனமான 'கிரப்ஸ் டெமாக் கம்பெனி'யாருடன் கூட்டுச் சேர்ந்து டில்லி சர்க்கார் அமைக்கவிருக்கும் இரும்பு உருக்குத் தொழிற்சாலைக்கான இறுதி ஒப்பந்தங்கள் முடிவடைந்துவிட்டன என்றும், இந்தத் திட்டத்திற்கு ஏற்கனவே மதிப்பிட்டிருந்ததைவிட (ரூ 75 கோடி) அதிகமாக ரூ. 40 கோடி செலவாகலாமென்றும் ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை முடித்துத் திரும்பியுள்ள டில்லி சர்க்கார் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

வடநாட்டு அகதிகட்கு உதவியளிக்க திட்டம்

3,08,000 பேர் நலன் பெறுவர்

அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத் தயாரிப்பில் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வரும் அகதிகளுக்கு உதவியளிப்பதற்காக ஒதுக்கப்பட வேண்டிய தொகையைக் குறித்து மாநில அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் மத்திய அரசாங்க அகதிகள் புனர்வாழ்விப்பு இலாகா அமைச்சரும் விவாதித்துள்ளனர்.

சிறு தொழில், குடிசைத் தொழில்மூலம் 3,08,000 அகதிகளுக்கு உதவியளிக்கும் திட்டத்தைக்குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் ஆதரவு தேட முயற்சி

காங்கிரசுத் தொண்டர்களுக்குப் பயிற்சி முகாம்கள் ஏற்படும்

அடுத்துவரும் பொதுத் தேர்தலில், காங்கிரசுக்கு ஆதரவு தேடும் வேலையில் ஈடுபடும் காங்கிரஸ் தொண்டர்களுக்குத் தக்க பயிற்சி அளிப்பதற்குப் பயிற்சி முகாம்கள் அமைக்க இந்திய தேசியக் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

டில்லியின் போலி கௌரவம்

ஏழை எளியோர் வெளியாரின் கண்ணில் தென்படாமல் தடுக்க முயற்சி

டில்லி அதிகாரிகள் தோல்வி கண்டனர்

ஏழை எளிய மக்கள் இந்தியாவில் தங்கள் வாழ்க்கையை நடத்த எத்துணை கஷ்டப்படுகிறார்கள் என்பதை, பெருமையோடு நேரு பண்டிதர் அழைத்துவரும் வெளிநாட்டுத் தலைவர்கள் கண்டுவிடக்கூடாது என்பதற்காக, அதிகாரிகள் பலரும் பெருமுயற்சி செய்வது உலகறிந்ததே! அப்படி ஒரு முயற்சி, டில்லியில் தோல்வி கண்டது பற்றிய செய்தி கிடைத்துள்ளது

'ஜந்தர் மந்தர்' என்ற சரித்திரப் புகழ் வாய்ந்த மண்டபத்தருகுள் நுழையும்போது, தெரு ஓரமாக வயதான பாட்டி ஒருத்தி சில பொருள்களை வைத்து வியாபாரம் செய்துகொண்டிருந்தவரை, கடையைக் கட்டி விலகிச் செல்லுமாறு போலீசார் நெருக்கிக்கொண்டிருப்பதை இந்தியா வந்துள்ள எத்தியோப்பிய மன்னர் ஹெய்லி செலாசி கண்டிருக்கிறார்.

பீடி வாங்கினார்

உடனே அவர் அந்தக் கிழவியை நெருங்கி, 'என்ன வியாபாரம் அம்மா செய்கிறாய்?' என்று கேட்டுக்கொண்டே, பீடி - சிகரெட் - தீப்பெட்டி, தட்டிலிருந்து ஒரு கட்டு பீடியை எடுத்துக்கொண்டு கிழவியின் கையில் ஒரு கத்தை ரூபாய் நோட்டுகளைத் திணித்தாராம்!

50 ரூபாய்!

மன்னர் சென்றபின், கிழவி அந்நோட்டுகளை எண்ணிப் பார்த்தபோது, தனக்கு ரூ 50 கிடைத்ததைக்கண்டு மகிழ்ந்திருக்கிறாள்.

தோல்வி!

கிழவியை, மன்னர் கண்ணில் படாமல் அப்புறப்படுத்த நினைத்த போலீசாரின் முயற்சி தோல்வியடைந்திருக்கிறது.

அகில இந்திய அரசியல் கட்சிகள் மாநாடு

புதுடில்லி, நவ. 9—

தேர்தல் கமிஷனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அகில இந்திய அரசியல் கட்சிகள் மாநாடு 13-ந் தேதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தி

மேலும் அதிகரிக்க முயற்சியாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உணவு உற்பத்தி அளவை மேலும் அதிகரிக்க மத்திய அரசாங்கம் தீவிரமாக யோசித்து வருகிறதாம்.

தேசிய வருமானம் அதிகரிக்கவும், பணவீக்கம் குறையவும் உற்பத்தியை மேலும் அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளதாம்! நவீன முறைகளில், தீவிர சாகுபடி செய்தால் அந்த உயர்வு ஏற்படக் கூடுமாம்!

நீர்ப்பாசனப் பிரதேசம் 210-இலட்சம் ஏகராவாக உயர்த்தப்பட்டுள்ளது.

முன்பு முடிவு செய்யப்பட்ட 6 லட்சம் டன் இரசாயன உர உபயோக அளவை 18 இலட்சம் டன்னாக உயர்த்திவிட்டனராம்! இந்தத் திட்டத்தை நடத்திவைக்க அமெரிக்கா உதவி புரியுமாம்!

சென்னை அரசாங்கம் முன்வருமா?

"ஏழைகளுக்கு விலைவாக வீடுகள் கட்டிக் கொடுப்பதாயின், இலவசமாக நிலமளித்தல், மனைக்கட்டுகளின் விலைவாசிகளை ஒழுங்குபடுத்தல் போன்ற உதவிகளை சென்னை அரசாங்கம் அளிக்க முன்வரவேண்டும்" என்று, சென்னை கூட்டுறவு வீடு கட்டும் நிலயத்தின் தலைவர் வி. எஸ். இரத்தின சபாபதி கூறியிருக்கிறார்.

இரயில்வே போக்குவரத்து [illegible] குறைவாக உள்ள இடங்களில் [illegible] போக்குவரத்தை அதிகரிப்பதற்கு தனியார் துறைக்கு வசதியளிக்கப்படுமென்று உதவி இரயில்வே அமைச்சர் ஷா நவாஸ் அறிவித்துள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—11—56 சனி

காற்றில் பறக்கும் 'இந்தியப் பண்பாடு'

"....தரக் குறைவான சரக்குகளை அனுப்புவது போன்ற கண்ணியமற்ற வர்த்தக முறைகளினால், கடந்த காலத்தில் நமது வெளி நாட்டு வர்த்தகம் வெகுவாகப்பாதிக்கப்பட்டிருக்கிறது"

"....வர்த்தகத் துறையிலிருப்போர், சர்வதேச அரங்கில் இழந்துவிட்டிருக்கும் நம்பிக்கையைத் திரும்பப் பெறும் வகையில், யோக்கியமான வர்த்தகத்தில் ஈடுபட்டாலன்றி, நமது வெளிநாட்டு வர்த்தகம் உடைபட்டுப் போகும்"

என்று ஆந்திர மாநில மந்திரி ஒருவர் கடந்த ஆகஸ்டுத் திங்களில் கூட்டம் ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

"ஆண்டொன்றுக்கு சுமார் 60 கோடி ரூபாய் வரையில், துணி ஏற்றுமதியின் மூலமாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறது; இந்தத் தொகை இனி 85 கோடி ரூபாயாக உயருமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு ஏற்றுமதி வர்த்தகம், வர்த்தகர் தம் தீய பழக்க வழக்கங்களால் குன்றிவருவதைத் தடுக்க சர்க்கார் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்"

என்று, முன்னாள் வர்த்தகத் தொழில் இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி இந்த ஆண்டுத் துவக்கத்தில் கூறியிருக்கிறார்.

இந்த இரு மந்திரிகளது வாசகங்கள், நிலையைத் தெளிவாக விளக்குகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து ஏற்றுமதியாகும் முக்கியமான உற்பத்திப் பொருள் துணிதான். ஏற்றுமதியாகும் துணியில் மிகப்பெரும் பகுதி வடநாட்டு ஆலைகளில் உற்பத்தியாகும் துணிதான். இந்தியத் துணைக் கண்டத்தில், வேறெல்லா உற்பத்தியையும் போலவே துணி உற்பத்தியும் மிகப்பெரும் பகுதி வடநாட்டில்தான்.

தென் கிழக்கு ஆசிய நாடுகள், மத்தியக் கிழக்கு நாடுகள், தூரக்கிழக்கு நாடுகள், ஐரோப்பாவில் சில நாடுகள் இங்கெல்லாம் இந்தியத் துணிகள் இறக்குமதியாகின்றன. இந்த நாடுகளில் மட்டுமல்ல, இந்தியத் துணிகளுக்கு நல்ல 'மார்க்கெட்' கிடைத்து வந்திருக்கிறது என்பதை, 'ஆண்டொன்றுக்கு ரூ. 60 கோடி கிடைக்கிறது,' என்ற மந்திரியின் வாக்கு மெய்ப்பிக்கிறது.

ஆனால், இந்த 'மார்க்கெட்' நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்பவையும், அதற்கான காரணத்தையும் ஆந்திர மந்திரி ஒருவர் விளக்கிக்காட்டி எச்சரித்திருக்கிறார் — 'ஒழுங்கு அழிந்துபடும்' என்று!

தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் சரி, ஐரோப்பிய மத்தியக் கிழக்கு நாடுகளிலும் சரி, இந்தியத் துணிகளுக்குப்போட்டியாக இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாட்டுத் துணிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்தப் போட்டியும், இந்தியத் துணி மார்க்கெட் வீழ்ச்சிக்குக் காரணமாகும் என்று சிலர் வாதிட்டிருக்கின்றனர். இதில் உண்மையும் இருக்கலாம். ஆனாலும், ஜப்பான், ரஷ்யா ஆகிய இரு நாடுகள் இந்தப் போட்டியில், யுத்த பிற்காலத்தில், சமீபகாலமாகத்தான் ஈடுபட்டிருக்கின்றன; பிரிட்டிஷ் அமெரிக்கப் போட்டி இருந்த காலத்திலும் இந்தியத் துணிகளுக்கு ஒரு நல்ல மார்க்கெட் கிடைத்து வந்திருக்கிறபோது, 'ரஷ்யாவும், ஜப்பானும் புதிதாகப் போட்டியில் இறங்கியதால் இந்திய மார்க்கெட் கலகலத்தது' என்று கூறப்படுவதை முழுவதுமாக நம்ப முடியாது.

ஜப்பான், ரஷ்ய நாடுகளின் போட்டி, இந்திய மார்க்கெட்டைப் போல, அமெரிக்கா, இங்கிலாந்து வாணிபத்தையும் பாதித்திருக்குமானால் இந்தக் கூற்றினை நம்புவதற்கு இடமிருக்கலாம். ஆனால், இங்கிலாந்தும் அமெரிக்காவும் தங்களுக்கிருந்த மார்க்கெட்டுகளை விரிவாக்கிக் கொண்டிருக்கின்றன என்றே அந்த நாடுகள் தரும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பின், இந்திய மார்க்கெட் கலகலத்தது, வீழ்ச்சியுறும் என்று எச்சரிக்கப்படும் நிலையில் இருப்பதற்கு என்ன காரணம்? இதற்கு ஆந்திர மந்திரி விளக்கம் கூறியிருக்கிறார்.

'மாதிரி' காட்டும்போது, அனுப்பிய துணியை அனுப்பாமல், வர்த்தக ஒப்பந்தம் ஆனவுடன் வேறாக (மட்டமான) துணியை இந்திய (வட நாட்டு) வியாபாரிகள் அனுப்புவதாகக் கடந்த ஆண்டில் சிங்கப்பூரிலிருந்து செய்தி ஒன்று வந்தது. ஆந்திர மந்திரியும், இந்திய (வட நாட்டு) வியாபாரிகளின் கண்ணியக் குறைவான—ஒழுங்குக் கேடான—நாணயக் குறைவான போக்கினை ஒப்பியிருக்கிறார்.

'நடவடிக்கை எடுப்போம்' என்று பேசிய மத்திய மந்திரி, இந்தக் கண்ணியக் குறைவான செயலில் ஈடுபட்ட வர்த்தகர்களைக் கண்டுபிடித்து ஏன் தண்டிக்கக் கூடாது என்றே நியாயவான்கள் கேட்கின்றனர்.

இந்த நிலை வெளிநாட்டு பொருளாதார ரீதியாக மட்டும் நஷ்டம் பயப்பது அல்ல; டில்லிப் பெரியவர்கள் கோபுரத்தில் ஏறி நின்று கூவுகிறார்களே—'இந்தியாவின் பண்பாடு, பழம் பெருமை பண்பாடு'—என்று, அந்தப் பண்பாட்டுப் பெருமையும் காற்றில் பறக்கும்!

வடநாட்டு முதலாளிகளின் போக்கையால் ஏற்படும் இந்த மானக்கேடான நஷ்டத்தை—பாவம் பண்டிதரும், டில்லிப் பெரிய மனிதர்களும் எப்படிச் சகித்துக் கொள்வார்களோ?

'பாரதம்' என்பதை உலகம் அறியுமா?

'தமிழ் நாடு' என்று ஏன் பெயரிடவில்லை?

சென்னை மந்திரிகள் தமிழர்தம் மானத்தைப் பறிக்கின்றனரே!

திரு-தமிழக இணைப்பு விழாவில் பொதுச் செயலாளர் முழக்கம்

கடந்த 2—11—56 அன்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் சார்பில், நாகர்கோவிலில் நடைபெற்ற திரு-தமிழக இணைப்பு நாள் விழாவில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை நேற்று தந்திருந்தோம்; மறு பகுதியின் சாரம் இங்கு தரப்படுகிறது :—

"மொழிவழியாக மாநிலங்களைப் பிரிக்கவேண்டும் என்ற தமது கோரிக்கையை எடுத்துக்கொண்டு கேரள மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் டில்லி சென்றார்; டில்லி மந்திரிகளுடன் தமது வாதத்தை ஒன்றரை மணி நேரமாக எடுத்துக் கூறினார்; ஆந்திர அமைச்சர் கோபால ரெட்டியாரும் தமது கோரிக்கையை எடுத்துக் கொண்டுபோனார்; ஒன்றரை மணி நேரமாக டில்லி அமைச்சர்களுடன் நியாயவாதம் செய்தார்; நமது அமைச்சர்களும்தான் போனார்கள்—பதின்மூன்றே நிமிடங்கள் பேசினார்கள்; கிடைத்த செங்கோட்டையில் ஒரு பகுதியையும் பறிகொடுத்துவிட்டுத் திரும்பிவிட்டார்கள்.

'வெட்கப்படுகிறோம்.......'

"கேரளத்தில் காங்கிரஸ் நிலைப்பதற்காக—கேரளீயர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தமிழர்களின் உயிர்கள் பலியிடப்பட்டிருக்கின்றன. இதற்குப் பின்தாங்கியவர்கள் சென்னை மந்திரிகள்தான்! அகில உலகக் கண்ணோட்டம் பேசும் அகில இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் ஏ. கே. கோபாலன்கூட, 'ஆறு யானைகளை சென்னைக்கு எடுத்துச் செல்லுகிறார்களே,' என்று தமது 'அகில உலகக்' கண்ணோட்டத்தைக்கூட ஒதுக்கிவிட்டுத் தனது மலையாள இன உணர்ச்சியுடன் குரல் எழுப்பினாரே, அந்த உணர்வுகூட நமது தமிழக அமைச்சர்களுக்கு இல்லையே என்று அறிய வெட்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"ஆணவக்காரர் என்று நாங்களெல்லாம் கருதிக்கொண்டிருக்கும் ஆச்சாரியார், ஆந்திரா தமிழகத்திலிருந்து பிரியும் சமயத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்ததால்தான், அன்று சென்னை நகரம் தமிழருக்குக் கிடைத்திருக்கிறது. இன்று ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் அன்று இருந்திருந்தால் நாம், சென்னை நகரத்தைக்கூடப் பறிகொடுத்து விட்டிருப்போம்.

தமிழ் நாடு எனப் பெயர் வேண்டும்

"சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்குமாறு தமிழக மக்கள் அனைவரும் குரலெழுப்புகிறார்கள்; ஆனால், பொதுமக்களின் குரலுக்கு மதிப்பில்லை. அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இதற்கெல்லாம் அவர்கள் கூறும் பதில், 'தமிழ் நாடு' என்று பெயர் வைத்தால் உலக நாடுகளுக்குத் தெரியாதாம்; 'சென்னை' என்ற பெயர்தான் உலகப் பிரசித்தி பெற்ற பெயராம். அப்படியானால், அகில இந்திய வானொலியில் எல்லாம், 'பாரதம்' என்றும், 'பாரதநாடு' என்றும் ஏன் கூறுகிறார்கள்? 'பாரதம்' என்று கூறினால் அகில உலகும் அறிந்துகொள்ளுமா? 'சென்னை' என்ற பெயர் ஏன் வந்தது? வெள்ளைக்காரர்களுக்குக் கோட்டை கட்டிக்கொள்ள இடம் தந்த சென்னியப்பன் என்ற அரசனின் பெயரால் வெள்ளையர் இந்தப் பெயரிட்டார்கள். ஆனால் 'தமிழகம்' என்று, தொல்காப்பியம், செகண்டியார், சிலப்பதிகாரம், புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற பழங்கால நூற்களிலும், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே........' என்று பாரதியார் பாடலிலும் காணக் கிடைக்கின்றன. இதனையாவது நமது அமைச்சர்கள் உணருவார்களா? இன்று இயங்கிருக்கிற இந்த சர்க்கார் இந்த நாட்டின் பெயரைக்கூட மாற்றியமைக்க முடியாத—அதிகாரமில்லாத ஒன்றாகத்தானே இருக்கிறது?

டில்லியின் வஞ்சனை?

"தென்னாடு, இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. 'வெறும் கண்துடைப்புக்காகவே, திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ 6,000 கோடியில் தென்னாட்டிற்கு ரூ 110 கோடி மட்டும் ஒதுக்கியிருக்கிறார்கள் உலகத்தவரின் கண்களில் பெரியவராகப் பட்டுவரும் நேரு பண்டிதர், ஏக இந்தியா கண்ணோட்டம் கொண்டிருப்பவர். ஆனால் அவருக்குப் பின்னால் இருப்பவர்களெல்லாரும் இந்தி மொழி வெறியர்கள்தான். நேருவிற்குப் பிறகு இந்த நாட்டில் ஒரு ஒன்றுபட்ட ஆட்சி இருக்குமா என்பதே பெரியதோர் ஐயப்பாடாகும்."

இவ்வாறு பேசிய பொதுச் செயலாளர் அவர்கள் மேலும் தொடர்ந்து பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும் இலட்சியங்களையும், அது தேர்தலில் ஈடுபடுவதின் நோக்கத்தையும் விளக்கினார்.

'தேர்தலில் 150 இடங்களில் போட்டியிடுவதென்று கழகம் முடிவு செய்திருக்கிறது. கழகம் தேர்தலில் கலந்துகொள்வது பதவிமோகம் கொண்டல்ல; நாட்டிலே நல்லமுறையில் ஜனநாயகம்—மக்களாட்சி தழைக்கவேண்டும் என்பதற்காகத்தான்; தேர்தலில் தோல்வியுற்றாலும் வெற்றி பெற்றாலும், மக்களைச் சந்தித்து அவர்களது குறைகளைத் தீர்க்க—கொள்கை உயர பாடுபட்டுக் கொண்டேதான் இருப்போம்; அந்த வகைய கழகத்தின் இலட்சியங்களுக்குப் பொதுமக்கள் போதரவுதந்து கழகம் மேலும் மேலும் வளர்ந்து வலுப் பெற பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் அவர் மாணவர்கள் நிலைபற்றிக் குறிப்பிடுகையில், 'மாணவர்கள் அரசியலில் நேரடிப் பங்குபெறக்கூடாது; ஆனால் அன்றாட அரசியல் நிலைகளைத் தெரிந்து வைத்திருக்கவேண்டும்; நமது நாட்டிற்கு ஆயிரக்கணக்கான அறிஞர்கள் தேவை. அதற்கு மாணவர்கள் எல்லாத் துறைகளிலும் கற்றுத் தேறி நாட்டிற்குப் பணியாற்ற முன்வரவேண்டும்; அத்தகு மாணவர்களை எப்போதும் தி. மு. கழகம் பெருமிதத்துடன் வரவேற்கும்' என்று குறிப்பிட்டார்.

இறுதியில் அவர் தமிழக அமைப்பில் தென்பகுதியிலிருந்து தாய்த் தமிழகத்துடன் சேரும் தமிழ் மக்கள் அனைவருக்கும் தி. மு. கழகச் சார்பில் தனது நல்வாழ்த்தையும் வரவேற்பையும் தெரிவித்துக் கொண்டார்.

★

நிகழ்ச்சிகள்

திரு-தமிழக இணைப்பு தினத்தையொட்டி இத்திங்கள் 2-ந் தேதியன்று நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகத்தால் சிறப்பான முறையில் விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொள்ள தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நாகர்கோவிலுக்கு வருகை தந்தார். நாகர்கோவில் நகருக்குச் சுமார் 8 கல் தொலைவிலுள்ள ஆரல்வாய்மொழியிலிருந்து வரவேற்பு வளைவுகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆரல்வாய்மொழி, தோவாளை, வெள்ளமடம், ஒழுகினசேரி ஆகிய இடங்களில பொது மக்கள் ஏராளமான அளவில்கூடி பொதுச்செயலாளர் அவர்களை வரவேற்று வாழ்த்தொலி எழுப்பினர்.

நாகர்கோவில் சென்றதும், அங்கு, இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு, 'இலக்கியம்' எனும் தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

பின்னர் நாகர்கோவில் கோட்டாறிலிருந்து பொதுச் செயலாளர் அவர்கள் வடசேரி வஞ்சி ஆதித்தன் புதுத் தெரு மைதானத்திற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் பின்தொடர ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

வஞ்சி ஆதித்தன் புதுத் தெரு மைதானத்தில் ஊர்வலம் முடிவுற்றதும், நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எம் குமாரசாமி தலைமையில் இணைப்பு தின விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றின பின், பொதுச் செயலாளர் அவர்கள், திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே எழுந்து அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

கோவை கரும்பு பற்றி சீனக் குழுத் தலைவர்

கோவை, நவ. 8—

இந்தியாவிற்கு வருகை தந்துள்ள சீன விவசாய ஆராய்ச்சிக் குழுவினர், கோவை கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையை பார்வையிட்டுள்ளனர்.

"கோவை கரும்பு ரகங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை என்றும், கோவை நிலையத்தின் மூலம் சீனா பல நன்மைகள் பெற்றுள்ளது என்றும், சீனாவில் சர்க்கரை உற்பத்தி ஏக்கருக்கு 17 டன்னாயிருந்தது இப்பொழுது மூன்று டன்கள் உயர்ந்துள்ளது என்றும் சீனக் குழுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை சட்டசபை

சென்னை, நவ 8—

சென்னை சட்டசபையும், மேல் சபையும் டிசம்பர் 17-ந்தேதி கூடுமென்றும், பொதுத் தேர்தல்வரையிலுள்ள 5 மாத காலத்திற்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் தெரியவருகிறது.

திராவிட நாடு வடநாட்டுடன் இணைக்கப்பட்டிருப்பதால், எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து உலகம் பழிக்கும் என்பதால்தான்-இன்னும் உலகம் முழுவதும், இந்தியப் பண்பாடு என்பது ஆரியப்பண்பாடே தவிர, திராவிடப் பண்பாட்டிற்கு நேர் முரணானது என்பதை உணராத நிலையிருப்பதால்தான் — நாம், வடநாட்டு முதலாளிகளின் இந்த இழிசெயலை இப்படிக் கண்டிக்க வேண்டியுள்ளது.

கழகச் செய்திகள்

சென்னை:

17-வது வட்டம்

21-10-56 மாலை, தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் கழக உறுப்பினர்கள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. தேநீர் விருந்துக்குப்பின், தோழர்கள் சு. பாலன், இமயவரம்பன், சின்னசாமி, திருவேங்கடம், இரா. தென்னவன், மு. கன்னியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

24-வது வட்டம்:

21-10-56 காலை 10 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் தோழர் ச. மதிவாணன் தலைமையில் நடைபெற்றப் பொது உறுப்பினர் கூட்டத்தில், படிப்பகப் புதுநிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: தி. ப. அரங்கநாதன்; துணைச் செயலாளர்: ந. சு. மணி; பொருளாளர்: வி. தி. கிருட்டிணசாமி. செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

37-வது வட்டம்:

4-11-56 காலை 11 மணிக்கு தோழர் கோ. இளவரசு தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் டிசம்பர் இரண்டாவது வாரத்தில் கிளைக்கழக 6-வது ஆண்டு விழா நடத்துவதென்றும், அப்போது தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பதென்றும், சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

44-வது வட்டம்:

3—11—56 இரவு 9 மணிக்கு, தோழர் ஏ. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கிளைக்கழக வரவு-செலவு, 19-8-56ல் நடைபெற்ற ஆண்டு விழா வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டன மற்றும் அனுதாபத் தீர்மானங்கள் சிலவும் நிறைவேற்றப்பட்டன.

வரகூரில் தி. மு. கழகத் துவக்க விழா

20—10—56 காலை, தோழர்கள் என். எஸ். இளங்கோ, அன்பரசன் தோழியர் சத்தியவாணி-முத்து ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர் கொடி ஏற்றுவிழாவும் கழகக் கட்டிடத் திறப்பு விழாவும் நடைபெற்றது மாலை 6 மணியளவில், பழனியப்பன் பூங்காவில் தோழர் மு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் என். எஸ். இளங்கோ, அன்பரசன் முருகானந்தம், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் கே. வி. கே. சாமி, சங்கரலிங்கனார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது

வரகுப்பையில் தி. மு. கழகத் துவக்கம்

23-10-56ல் தோழர் இரா. முத்துச்சாமி தலைமையில் மேற்படி கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் ஏ. பி. தர்மலிங்கம், ஏ. தம்புசாமி, எம். வடிவேல், டி. இரத்தினம், இரா. முத்துச்சாமி, செங்குட்டுவன், பி. ஏ. இராமலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இரவு 10 மணிக்குதோழர் எம். வடிவேல்தலைமையில் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. செயலாளர்: எம். கந்தசாமி; துணைச் செயலாளர்: எம். முத்துச்சாமி; பொருளாளர்: ஆர். அழகப்பனார்; மாவட்டப் பிரதிநிதி: ஆர். முத்துசாமி. செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கேசிங்கனில் தி. மு. கழகத் துவக்கம்

1—11—56 மாலை 6 மணிக்கு மாயவரம் வட்டம் கேசிங்கனூரில், தோழர் இரா. கோவிந்தசாமி தலைமையில் தி. மு. கழகக் கிளை துவக்க விழா நடைபெற்றது தோழர்கள் பொ. தருமன், ம. கோ. மணி, எச். அசோகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

ஆலந்துறையில் கழகப் பொதுக்கூட்டம்

1—11—56 மாலை 6 மணிக்கு தோழர் வீ. வீராசாமி தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், எஸ். ஏ. இராசமாணிக்கம். ஏ. என். சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அய்யம்பாளையத்தில் கழகப் பொதுக்கூட்டம்

2—11—56-ல், அய்யம்பாளையம் மாகாளியம்மன்கோயில் திடலில் தோழர் ப. கிட்டப்பன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பொதுக்கூட்டத்திற்குப் பின் கிளைக் கழகப் பணிமனையில் நடைபெற்றப் பழனி தொகுதிக் குழுக் கூட்டத்தில், தொகுதிக் குழு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் செயலாளர்: இரா. துரை; துணைச் செயலாளர்: ஏ. பி. கிருஷ்ணசாமி, பொருளாளர்: பு. கா. பழனியப்பன். குருவரெட்டியூர், அந்தியூர், வெள்ளக்கோவில், அரச்சலூர், பவானி ஆகிய கிளைப் பிரதிநிதிகள் அடங்கிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

கம்பத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

3—11—56 இரவு 8 மணிக்கு, வ. உ. சி. திடலில், தோழர் வெ. இராமசாமி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, இரா. சு. அரசுக்கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சாத்தான்குளத்தில் சர்வகட்சி பொதுக்கூட்டம்

4—11—56 இரவு 7 மணிக்கு, சாத்தான்குளம் காந்தி மைதானத்தில் தோழர் கே. சேர்மத்துரை (தி. மு. க.) தலைமையில் சர்வகட்சி யுத்த எதிர்ப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுப்பையா (காங்): எஸ். வெள்ளைச்சாமி (கம்), வீ. சு. காசி (தி. க.), எஸ். ஏ. கைலாசம் (ம. ஐ. மு. க.) சி. சண்முகம் (சுயே), ஜி. மணி, கே. சங்கரன் ஆகியோர் பிரிட்டிஷ்—பிரெஞ்சு—இஸ்ரேல் சர்க்காரின் அக்கிரமச் செயலைக் கண்டித்தும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

ஆற்றங்கரை (நெல்லைமாவட்டம்) தி.மு.க

3—11—56ல், தோழர் கு. ஆறுமுகசாமி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் ம. சு. ஏசாக்கு, பி. குருசாமி ஆகியோர் முறையே செயலாளர், மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய்—தாணு தி. மு. க.

3—11—56 காலை 10 மணிக்கு, தோழர் செல்லவாணன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், செயலாளர் தோழர் செல்லவாணன் வேற்றூர் செல்வதால், தோழர்கள் இராசகோபாலன், தாசன் ஆகியோர் தற்கால செயலாளர், துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய்-கம்பாலா ஹில் தி. மு. கழகம்

6-10-56 இரவு 10½ மணிக்கு கிளைக் கழக மாதாந்திரக்கூட்டம் ஆஜி அலி திடலில் தோழர் கா. பா. அரங்கண்ணல் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஞா. சி. அன்பழகன், கே. எஸ். முத்துநாயகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கிளைக் கழகச் செயலாளர் தோழர் கை. சுப்பையர் துணைவியார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சந்தைப்புதுப்பாளையம் தி. மு. கழகம்

16—10—56 இரவு 6 மணியளவில் தோழர் து. சுப்பராயன் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்—செயலாளர்: கா. மா. மாரிமுத்து; துணைச் செயலாளர்: வி. பி. டி. சாமி; பொருளாளர்: பு. வெ. முனுசாமி; மாவட்டப் பிரதிநிதி: கா. மா. மாரிமுத்து.

பம்பாய்—தாராவி தி. மு. கழகம்

17—10—56 இரவு 7 மணிக்கு, 'திராவிட மாளிகை'யில் தோழர் சு. தங்கவேலன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகளிடம் கழகப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

திருச்சி — வரகனேரி தி. மு. கழகம்

27—10—56-ல், நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கெனச் சிறப்புக் கூட்டம் ஒன்று நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலூர் (பொன்னேரி வட்டம்) தி. மு. கழகம்

28—10—56 இரவு 8 மணியளவில் செயலாளர் இல்லில், தோழர் சி. ஏழுமலை தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தேர்தல் நிதிக்காக கழக உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒருநாள் ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்றும், வரும் ஜனவரித் திங்களில் பொதுக்கூட்டம் நடத்தி தேர்தல் நிதி தருவதென்றும், கழக 7-வது ஆண்டு விழாவையும் அன்றையத் தினமே கொண்டாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பம்பாய் - தாராவி தி. மு. க.

29—10—56 இரவு 8 மணிக்கு, திராவிடமாளிகை'யில், தோழர் சு. தங்கையா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், 10-பேரடங்கிய தேர்தல் நிதி வசூல் குழு அமைக்கப்பட்டது. மற்றும் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

திருப்பனந்தாள் தி. மு. க.

1—11—56 காலை 9 மணிக்குப் பஞ்சாயத்து அலுவலகத்தில், தோழர் ம. கோ. மணி தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: சா. மதியழகன்; துணைச் செயலாளர்: ம. சுந்தரேசன்; பொருளாளர்: செல்லப்பா. இறுதியில், சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது

கொட்டாரக்குடி தி. மு. க.

6—11—56 மாலை 7 மணிக்கு, இளங்கோ அறிவுப் படிப்பகத்தில் தோழர் கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி வசூலிப்பதென்றும், சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வேலூர்—வேலப்பாடி தி. மு. கழகம்

4—11—56 மாலை 3 மணிக்கு, வேலூர் 28-வது வட்டக் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் வே. மா. பா. சாரதி இல்லத்தில், தோழர் க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. 28—10—56-ல் நடைபெற்றப் பொதுக்கூட்ட வரவு-செலவுகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், அக்கூட்டத்திற்கு நிதி உதவி அளித்த பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்தும், சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகம்

4—11—56 காலை 10½ மணிக்கு திரு. எம். வேதாசலம் அவர்கள் இல்லத்தில் மாவட்டச் செயலாளர் தி. க. சம்பந்தம் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில், முன்னாள் மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி அவர்களிடமிருந்து பழைய வரவு ரூ. 101-ம் பொருளாளரிடம் ஒப்படைத்தும், தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டத் தோழர்கள் தி. க. சம்பந்தம், ஜே. ஏ. வகாப், டி. இராசரத்தினம், முனு. ஆதி, ஆர். வெங்கடேசன், சி. வி. எம். அண்ணாமலை, வி. என். இராமலிங்கம் ஆகியோரடங்கிய குழு ஒன்று நியமித்தும், மூலக்கடை, புழல், திருவொற்றியூர், மாதவரம், ஆலந்தூர், செங்குன்றம், கொடுங்கையூர் ஆகிய கிளைகள் சென்னை மாவட்டத்திலிருந்து செங்கற்பட்டு மாவட்டத்திற்கு உடனடியாக மாற்றப்பட வேண்டுமென்று பொதுச்செயலாளரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர் கே. வி. கே. சாமி, ஆனைகாபுத்தூர் தோழர் இராமலிங்கம் மனைவியார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சத்திரப்பட்டி தி. மு. க.

சத்திரப்பட்டி தி. மு. கழகக் கிளையின் பொது உறுப்பினர் கூட்டம், தோழர் டி. கே. கே. சாமி தலைமையில் நடைபெற்றபோது, திருவில்லிப்புத்தூர் தொகுதி முழுமையிலுமாக சைக்கிள் மூலம் ஒரு மாத காலம் சுற்றுப்பயணம் செய்து கழகத் தேர்தல் ஆக்க வேலைகளைக் கவனிப்பதென்று முடிவு செய்து, முதல் குழுவினராக 5—11—56 முதல் தோழர் டி. கே. கே. சாமி, ஆர். இலட்சுமணன் ஆகியோர் தலைமையில் தோழர்கள் பலர் புறப்பட்டனர். தேர்தல் நிதி திரட்டுவதற்கெனவும் குழு ஒன்று அமைத்து, நிதியளிக்க வேண்டிய அவசியத்தைப் பொதுமக்களுக்கு விளக்கத் துண்டுப் பிரசுரம் வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திராவிடக் கனிச் செல்வங்கள்

ஐதராபாத் பகுதியில் வைரம், நிலக்கரி

டில்லி ஆராய்ச்சி நடத்துமாம்

முன்னாள் ஐதராபாத் மாநிலத்தின் சில பிரதேசங்களில் வைரக் கனிகள் கிடைக்கக்கூடும் என்று கருதப்படுகிற பகுதிகளில் தீவிர ஆராய்ச்சி நடத்த டில்லி சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

மேலும், அதை ஒட்டிய சில பிரதேசங்களில் நிலக்கரி கிடைக்கும் என்று கூறப்படுகிற பகுதிகளையும் ஆராய டில்லி திட்டமிட்டிருக்கிறதாம்.

விடுதலை பெற்ற

டுனீஷியா, மொராக்கோ

'யுனெஸ்கோ'வில் இடம் பெற்றன

அண்மையில் விடுதலை பெற்ற டுனீஷியா, மொராக்கோ ஆகிய வட ஆப்பிரிக்க நாடுகள் இரண்டும் 'யுனெஸ்கோ'வின் முழு உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன

அல்ஜீரியா, ஒரு கூட்டு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதுடன் 'அது மாநாட்டில் ஓட்டுரிமை இல்லாது பங்குபெறலாம்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கொழும்பு நாடுகள் மாநாடு

'பலன் தராது' என்கிறார் பாகிஸ்தான் பிரதமர்

'கொழும்பு நாடுகள் மாநாட்டினால் எந்தவித உபயோகமும் இருக்க முடியாது' என்று கூறி, பண்டித நேருவுக்கும், இந்தோனேஷியப் பிரதமருக்கும் பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தி பதில் அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

'தெஹ்ரானில் நடைபெறும் பாக்தாத் ஒப்பந்த நாடுகள் மாநாடு, மத்திய கிழக்கு நிலைகளை விவாதிக்கவே நடைபெறுகிறது; அந்த மாநாடு முடிந்த பின்னர் வேண்டுமானால் நான் வருவது அவசியம் என்று நீங்கள் கருதினால், வருவது பற்றி யோசிக்கிறேன்' என்றும் சுராவர்த்தி குறிப்பிட்டிருக்கிறாராம்.

எகிப்துமீது நடைபெறும் ஆக்கிரமிப்பை ஒழிப்பதற்குத் தன்னாலான வகையில் எல்லாம் பாகிஸ்தான் பாடுபட்டு வருகிறது என்றும், ஐ. நா. - வும் பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்றும் பாகிஸ்தான் பிரதமர் விளக்கம் தந்திருக்கிறார் என்று தெரியவருகிறது.

இராசபாளையம் பொதுக்கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத் கருத்துரை

"வடநாட்டில் ஐந்தாண்டுத் திட்டத்தின் பெயரால் பல பெரிய அணைக்கட்டுகளும் ஆலைகளும் உருவாகின்றன. ஆனால், தென்னாட்டில் அப்பளத் தொழிற்சாலைக்கும் வார்தா செக்கிற்கும்தான் திட்டம் போடுகிறார்கள். இதை நாம் எடுத்துச் சொன்னால், நம்மை 'பிரிவு மனப்பான்மை கொண்டோர் — வெள்ளையருக்கு வால் பிடித்தோர்' என ஏசுகின்றனர். காங்கிரசார், தேவிகுளம்—பீர்மேடு போன்ற செல்வம் கொழிக்கும் இடங்களை விட்டுவிட்டு, 'குளமாவது — மேடாவது?' என்று கேலிபேசுகின்றனர். காங்கிரஸ்காரர்களின் கையாலாகாத்தனத்தை மக்கள் மன்றத்தின் முன் எடுத்துச் சொல்லவும், வடநாட்டிலிருந்து தென்னாடு பிரிந்தால் தான் நாம் வாழமுடியும் என்பதைத் தெரியப்படுத்தவும் தி. மு. கழகம் வரும் பொதுத் தேர்தலில் 150 இடங்களில் போட்டி போடுகிறது,"

என்று, ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் இராசபாளையத்தில் நடைபெற்றக் கழகப் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

4—11—56 மாலை 4 மணிக்கு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது இரவு 6½ மணியளவில் தோழர் இராமச்சந்திரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது பல கிளைக் கழகங்கள், படிப்பகங்கள் சார்பாக தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

வைதீகத்திற்கு மேலும் அடி

காஞ்சி கச்சி ஏகம்பன் கோயிலுக்கு தாழ்த்தப்பட்டவர் தர்மகர்த்தா

காஞ்சி, நவ. 9—

காஞ்சி ஏகாம்பர நாதர் கோயில் தேவஸ்தானத்திற்கு முதன் முறையாக ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் தர்மகர்த்தா வாக நியமிக்கப்பட்டிருப்பதின் மூலம் வைதீகத்திற்கு மேலும் ஒரு பெரும் அடி தரப்பட்டிருக்கிறது.

மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சங்க துணைத் தலைவர் எம் கண்ணன், நடேச (முதலியார்), சுப்ரமணிய (அய்யர்) ஆகிய மூவரும் காஞ்சி, கச்சி ஏகாம்பரன் கோயிலுக்கு, ஐந்து ஆண்டுகளுக்கு தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

ஐ. நா. போலீஸ் படை உருவாகிறது

சில தகவல்கள்

மேஜர் ஜெனரல் பர்ன்ஸ் சர்வ தேசப் படைத் தலைமையை ஏற்றார்; பார்வையாளரை நியமித்தார்

அடுத்த ஐந்து நாட்களில் கனடா, இந்தியா, நார்வே, சுவீடன், டென்மார்க், பாகிஸ்தான் 4,000 துருப்புக்களைத் தருமென்றும், ஐ நா.-வின் பெயரால் பெரிய அமெரிக்க விமானங்கள் அவற்றை ஏற்றிக்கொண்டு வருமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் 13 நாடுகள் துருப்புக்களை அனுப்ப இணங்கியுள்ளது.

படையில் இந்தியா

ஐ. நா. அமைக்கிற போலீஸ் படையில் இந்தியா கலந்துகொள்ளச் சம்மதிக்கிறது என்பதை, ஐ நா.-வில் உள்ள நிரந்தர இந்தியப் பிரதிநிதி ஆர்தர். எஸ். லால், ஐ நா. பொதுச் செயலாளரிடம் உறுதியாகக் கூறியிருக்கிறாராம்.

யூகோ சம்மதம்

சர்வதேசப் படைக்குத் துருப்புகளை அனுப்ப யுகோஸ்லாவியா சம்மதம் தெரிவித்துள்ளதாம்.

முன்னர் முறைத்தனர்- பின்பு பணிந்தனர்!

ஜெருசலம், நவ. 9—

சூயஸ் கால்வாய் பகுதிக்குள் சர்வதேசப்படை வந்தவுடன், இஸ்ரேல் கைப்பற்றியுள்ள எகிப்து பகுதிகளிலிருந்து (சினாய் தீபகற்பம் உள்பட) இஸ்ரேல் தன்னுடைய படைகளை வாபஸ்பெறும் என்று உறுதியாக பிரதர் பென்—குரியன் அறிவித்துள்ளார்.

சினாய் தீபகற்பத்தை எகிப்திடமிருந்து கைப்பற்றிய இஸ்ரேல் அதிலிருந்து வாபஸ் பெறமுடியாது என்று முன்பு அறிவித்தது; பார்லிமெண்டும் அதை ஏற்றது; இன்றுதான் ஐ. நா. தீர்மானத்தை அது ஏற்றது.

பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகளும் வெளியேறும்

பாரிஸ், நவ. 8—

ஐ. நா. அமைக்கும் சர்வதேசப் படை வந்தாலும் வராவிட்டாலும், பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள் அடுத்த வாரம் கண்டிப்பாக வாபஸ் பெறப்படும் என்று தெரியவருகிறது.

அரபு நாடுகளின் உணர்வு

லண்டன், நவ. 9—

வெளிநாடுகளின் தூதுவர்களுக்கு பிரிட்டிஷ் அரசியார் அளித்த வருடாந்திர விருந்தில் அரபு நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொள்ளவில்லையாம்.

உறவு அறுபட்டது!

பாக்தாத், நவ. 9—

இராக் அரசாங்கம் பிரான்சுடன் கொண்டிருந்த தனது இராஜதந்திர உறவைத் துண்டித்துக் கொண்டு விட்டது.

ஹங்கேரி நிலைமை

நிலைமையைக் கண்டறிய ஐ. நா. பார்வையாளர் செல்வார்?

ஹங்கேரியில் இருந்துவரும் நிலைமையை நேரில் கண்டறிவதற்காக ஐ நா. பார்வையாளரை தாம் நியமித்துக்கொண்டிருப்பதாக ஐ நா. செயலாளர் அறிவித்துள்ளார். அவர்களை ஹங்கேரி அரசாங்கம் அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

நெருக்கடி நிலைமையே நீடித்து வருகிறதாம்!

கல்கத்தா, நவ. 9—

"போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்னருங்கூட உலகத்திற்கு நெருக்கடியான நிலைமையே நீடித்து வருகிறது" என்று பண்டித நேரு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

சொந்த விவகாரமாம்

பெர்லின், நவ. 8—

"ரஷ்யத் துருப்புக்களை ஹங்கேரியிலிருந்து வாபஸ்பெறும் பிரச்சினை சோவியத்—ஹங்கேரி அரசாங்கங்களின் தனி விவகாரம்" என்று ரஷ்யப் பிரதமர் புல்கானின், அமெரிக்கத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது.

'எகிப்தின் உரிமையை இழந்துவிட இயலாது'

கால்வாயைச் செப்பனிடுவது பற்றி நாசர் அறிவிப்பு

கெய்ரோ, நவ. 9—

'எகிப்திய மண்ணில் ஒரு வெளிநாட்டுப் போர்வீரன் இருக்கும் வரையில் சூயஸ் கால்வாயைப் பழுது பார்க்கும் வேலையை எகிப்து அனுமதிக்காது" என்று நாசர் அறிவித்துள்ளார்.

"தன்னுடைய உரிமையையோ, கௌரவத்தையோ பாதிக்கும் எந்த நிபந்தனையையும் எகிப்து ஏற்றுக் கொள்ளாது" என்றும் நாசர் கூறியுள்ளார்.

'வினை'யின் விளைவு!

லண்டன், நவ. 8—

மத்தியக் கிழக்கு நெருக்கடி காரணமாகப் பிரிட்டனின் எண்ணெய் 'ஸ்டாக்'களை சேமித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரிட்டிஷ் சர்க்கார் உத்தரவிட்டுள்ளதாம்.

எண்ணெய் விநியோகத்தை 10 சத விகிதம் குறைக்குமாறு எண்ணெய்க் கம்பெனிகளுக்கு உத்தரவு போடப்பட்டுள்ளது; இந்தக் குறைப்புத் திட்டத்துக்கு ஒத்துழைக்காவிட்டால், பங்கீடு முறை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்படுமென்று எச்சரிக்கப்பட்டுள்ளதாம்.

பெருமழையின் விளைவு

ஏரிகள் உடைபடுமென அஞ்சப்படுகிறது?

சென்னை, நவ. 9—

சென்னை மாநிலத்தில் பரவலாக மழை பெய்துள்ளதின் காரணமாக சேலம், வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களிலுள்ள ஏரிகள், குளங்கள் நிரம்பியுள்ளனவாம்!

இந்த மழை மேலும் நீடித்தால் ஏரிகளில் உடைப்பு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறதாம்.

சம்பள உயர்வு அல்லவாம்!

'கிராக்கிப்படி'தான் என்று அமைச்சர் விளக்கம்

சென்னை, நவ. 8—

ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வு, சமீபத்தில் நிதி அமைச்சர் சட்டசபையில் அளித்த கிராக்கிப்படி உயர்வுக்குப் பதிலாகவே என்றும், அதிகப்படியாக அல்ல என்றும், கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் விளக்கம் தந்துள்ளார்.

எல்லாத் துவக்கப்பள்ளி ஆசிரியர்கட்கும் தனிப்பட்ட மானேஜ்மெண்டுகளின் கீழ் வேலை செய்யும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் நவம்பர் 1-ந் தேதி முதல் ரூ 45—2—85 வீதம் ஒரே மாதிரியான சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இவ்வுத்தரவு 1—11—56 முதல் அமுலுக்கு வரும்.

கல்வி பற்றிய சர்க்கார் கொள்கையைப் பரிசீலனை செய்து அங்கீகரித்துள்ள சட்டசபைக் கமிட்டியின் சிபாரிசின் அடிப்படையில் ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை மாற்றுவது குறித்து ஒரு இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் வரையில் இடைக்கால ஏற்பாடாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இடைக்கால உத்தரவுப்படி, உதவி பெற்ற எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 7-ம்; தற்போது மானேஜ்மெண்டு பள்ளிகளில் மாதம் ரூ. 39-க்குக் குறைவாக சம்பளம் பெறும் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 6-ம்; ரூ. 40-ம், அதற்கு அதிகப்படியாகச் சம்பளம் பெறும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 5-ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு, கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர சென்னை மாநிலம் முழுவதிலும் அமுலுக்கு வரும்.

வெள்ளை மணலிலிருந்து செங்கல் உற்பத்தி

திருவனந்தபுரம், நவ. 8—

வெள்ளை மணலிலிருந்து செங்கல் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று கோட்டயம் மாவட்டத்தில் தனியார் துறையில் நடத்துவதற்கு அனுமதிக்கப்படும்

இந்த நிர்வாகத்தில் மாநில அரசாங்கம் ரூ. 5 இலட்சம் பெறுமான மூலதன பங்கு பெற்றுள்ளது.

மாதம் ஒன்றுக்கு 10 இலட்சம் செங்கல் உற்பத்தி நடைபெறுமாம்.

'டூரிங்' சினிமாக்கள்

நிரந்தர சினிமாத் தியேட்டர்களுக்கு ஒரு மைல் தூரத்தில்தான் டூரிங் சினிமாக்களை நடத்தலாமென சென்னை அரசாங்கம் ஒரு திருத்த உத்திரவு பிறப்பித்துள்ளது.

தோழர்களுக்கு அறிவிப்பு

★

நமது அலுவலக அச்சு இயந்திரத்தில் (மெஷின்) ஏற்பட்ட கோளாறின் காரணமாகக் கடந்த நாலைந்து நாட்களாக தாமதமாகவே பிரதிகள் அனுப்ப வேண்டி ஏற்பட்டது என்பதை, பிரதிகள் தாமதமாகக் கிடைத்ததாகக் கடிதம் எழுதிய ஏஜெண்டுத் தோழர்கள், சந்தாதாரர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வதோடு இயந்திரம் சீர்செய்யப்பட்டுவிட்டதால், இனி காலாகாலத்தில் இதழ்கள் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—நிர்வாகி: 'நம் நாடு'

கழகக் கூட்டங்கள்

★

வடக்கன்குளம் :

(நெல்லை மாவட்டம்)

13—11—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : சு. வன்னியப்பெருமாள்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

என். பி. எம். அப்துல்காதிர்

வி. வன்னியன்

வடவைவணன்

★

திருவத்திபுரம் :

13—11—56 மாலை 6-மணிக்கு

தலைவர் : சி. வே. சுப்பராயன்

பேசுவோர் :

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

வி. முனுசாமி

ஏ எல். சி. கிருஷ்ணசாமி

தமிழக அமைப்பு நாள் விழாக் கூட்டங்கள்

சென்னை 19-வது வட்டம் :

11-11-56 மாலை 6-மணிக்கு, சென்னை—ஓட்டேரி பாஷியம் ரெட்டித் தெருவில், தோழர் பெருமாள் தலைமையில் நடைபெறும். தோழர் சி. பி சிற்றரசு, தோழியர் சத்தியவாணிமுத்து, மாணவி சற்குணம், டி. எஸ். சற்குணம் — சகாதேவன் ஆகியோர் பேசுவர்.

* * *

காஞ்சிபுரம் :

11—11—56 மாலை 6 மணிக்கு பெரிய காஞ்சிபுரம் தேரடி அருகில், தோழர் டி. சீனிவாசன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் காஞ்சி-கல்யாண சுந்தரம், எஸ். எஸ். தென்னரசு, சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை 17-வது வட்டம்

11-11-56 காலை 9 மணிக்கு, சூளை, எண் 17, மாணிக்கச் செட்டித் தெருவிலுள்ள கழகப் பணிமனையில் தோழர் கோ. சடகோபன் தலைமையில் நடைபெறும்.

* * *

சென்னை 2-வது வட்டம் :

11—11—56 காலை 9-மணியளவில், சென்னை-இராயபுரம் சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப் பணிமனையில், தோழர் இராவணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ச. மாறன், சி. இளங்கோ, தி. ந. மதிவாணன், கு இரா. அன்பரசு இளவழகன் ஆகியோர் பேசுவர்.

திருமணம்

அன்புடையீர் !

13-11-56 காலை 10-மணிக்கு, சேலம் மாவட்டம்—பெத்தநாயக்கன்பாளையம், எனது இல்லத்தில், எனது மைத்துனர் திரு. ஆறுமுகம் அவர்களின் செல்வி அலமேலுக்கும் திரு. நாராயணன் அவர்களின் செல்வன் பெரியசாமிக்கும் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

எம். பி. சுப்பிரமணியம் M L A

பெத்தநாயக்கன்பாளையம்

தோழர்கள் இதையே அழைப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

இந்த இலட்சணத்தில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வதில் தாமதம் ஏற்படும் என்றும் குழு அஞ்சுவதாகக் கூறப்பட்டுள்ளது.

'உலகக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது, மேற்கு ஆசியாவில் வளர்ந்துள்ள நிலைமை, இந்திய மக்களின் நல்வாழ்விற்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாதகமாக உள்ளது' என்றும் குழு குறிப்பிட்டிருக்கிறது

கன்னியாகுமரியில் அபிவிருத்தித் திட்டங்கள்

அமைச்சர் தரும் கருத்து

சென்னையுடன் இணைந்துள்ள கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பெரிய திட்டம் எதுவும் இல்லையென்றும், ரூ 1 கோடி செலவாகக்கூடிய சிறிய திட்டமொன்று இருப்பதாகவும், பெரிய திட்டங்களுக்கு அங்கு வாய்ப்பு இருப்பதாகப் பலர் கூறுவதாகவும், தனக்கு அது குறித்து ஒன்றும் தெரியாதென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் நிருபர்களிடம் அறிவித்துள்ளார்.

மேலப்பாளையம் நகர தி.மு. கழகத் தோழர்களுக்கு

13-11-56 பிற்பகல் 4 மணிக்கு மேலப்பாளையம் செட்டி குளம் கடை வீதி, எம். எம் பி சிட்டுக் கம்பெனி மாடியில் கிளைக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். தேர்தல் நிதி, கழக எதிர்கால வேலைத் திட்டங்கள், புதிய செயற்குழு தேர்தல் ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை 5-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம்

12—11—56 இரவு 8 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் (எண் 2, துளசிங்க கிராமணித் தெரு), கழகப்பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

நூல் நிலைய வளர்ச்சி நிதிக்கு 'மாலா எம்.ஏ.,' நாடகம்

11-11-56 மாலை 6 மணிக்கு சென்னை அரண்மனைக்காரத் தெரு செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில், திருவல்லிக்கேணி கே எஸ். பாண்டியன் படிப்பக நூல் நிலைய வளர்ச்சி நிதிக்காக, தோழர் க. அன்பழகன் தலைமையிலும் தோழர் பி ஆர். கோகுலகிருட்டிணன் முன்னிலையிலும், பாண்டியன் நாடக மன்றத்தாரால் 'மாலா எம்.ஏ.,' நாடகம் நடைபெறும்.

'படித்த முட்டாள்' நாடகம்

11-11-56 மாலை 6-30 மணியளவில், சென்னை (தி. நகர்) வாணி மகாலில் தோழர் எம். எஸ். ஜெயசேகர் அவர்கள் தலைமையில், தினகரன் நினைவு நாடக மன்றத்தாரின் 'படித்த முட்டாள்' என்னும் நாடகம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

11-11-56 காலை 10 மணிக்கு, சென்னை-வண்ணை இளங்கோ கலை மன்றச் சார்பில், தோழர் மு செல்லப்பன் தலைமையில் 'எதிர்க் கட்சி ஏன்?' என்ற தலைப்பில், நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

சுகாதாரப் பிரச்சாரம்

11-11-56 காலை 7 மணிக்கு, தோழர் இரா. சந்திரசேகரன் தலைமையில், வண்ணையம்பதி வீதிகளில் இளங்கோ கலை மன்றச் சார்பில் மாணவ—மாணவிகள், மன்றத் தோழர்கள் ஊர்வலமாகச் சென்று சுகாதாரப் பிரச்சாரம் செய்வார்கள்.

சென்னை கல்விச் சங்கம்

11-11-56 மாலை 5 மணிக்கு, சென்னை—சூளை பட்டாளம் ஸ்ட்ரான்ஸ் ரோட் ஆண்பள்ளியில் மேற்படி சங்க ஆதரவில், திரு. த. வே. முருகேசனார் தலைமையில் தோழர்கள் தொ. இரா செயராமன், க. வீ. வரதன், 'இலக்கியர் தரும் இன்பம்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம். ஏ.